**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.191/2023**

**Deposition of P.W.** 4

Name : ஜாண்போஸ்கோ

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:06.08.2025

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் பாகோட்டில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனராக தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 அ.சா.2ஐ தெரியும் இன்று ஆஜராகியுள்ள ஆஜர் எதிரியை தெரியும். இன்று ஆஜராகாத எதிரி குமாரதாஸ்–ஐ தெரியும். தி.மு.க. கட்சி கூட்டம் நடைபெற்றது. அதில் டீசல் விலை உயர்வை பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஏற்பட்ட பிரச்சனையை வீடியோ கிராபர் வீடியோ எடுத்தார். எதிரிகள் வீடியோ கிராபரிடம் பிரச்சனை செய்து கேமராவை பிடுங்கி தரையில் அடித்து விட்டார்கள். உடன் வந்த அதிகாரி போணை எடுத்தார். அதையும் எதிரிகள் வாங்கி உடைத்து விட்டார்கள். மக்கள் எதிரிகளை கூப்பிட்ட உடன் எதிரிகள் ஓடி விட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

23.01.2021ம் தேதி கட்சி கூட்டம் நடந்தது. எனது வீடு பாகோட்டில் உள்ளது. சம்பவம் பூக்கடையில் வைத்து நடைபெற்றது. பூக்கடைக்கும் – பாகோட்டிற்கும் இடையில் சுமார் 38 கி.மீ துாரம் இருக்கும். திக்கணங்கோட்டிற்கு செல்வதற்காக பூக்கடைக்கு வந்தோம். திக்கணங்கோட்டிற்கு நண்பர்களை பார்ப்பதற்காக சென்று கொண்டிருந்தோம். பாகோட்டிலிருந்து – திக்கணங்கோடு செல்வதற்கு பூக்கடை வரவேண்டியதில்லை என்றால் அழகியமண்டபம் வரவேண்டி இருந்ததால் அந்த வழியாக வந்தோம். என்னுடன் வந்த சஜித்குமாருக்கு அழகியமண்டபத்தில் வேலை இருந்ததால் அந்த வழியாக வந்தோம். சஜித்குமார் அவரது நண்பர் ஒருவரை பார்த்து பேச போனார். பூக்கடை அருகே செல்லும் போது 09.00 மணி இருக்கும். திக்கணங்கோட்டிற்கு நண்பர் ஜெப்ரின் என்பவரை பார்க்க போனேன். இரவு 09.00 மணிக்கு திக்கணங்கோடு செல்லவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ சம்பவ நாளன்று தான் தெரியும். சம்பவம் நடந்த போது ஆறுதலாக பேசியதில் பழக்கம். சம்பவ இடத்தில் 100க்கும் மேற்பட்ட நபர்கள் இருந்தார்கள். சம்பவத்திற்கு முன்பு எதிரிகளை தெரியாது. எதிரிகள் முகவரி தெரியாது. பெயரை சம்பவ இடத்தில் பேசிக்கொண்டார்கள் அதன் மூலம் தெரியும். போலீசார் சம்பவம் நாளன்று விசாரித்தார். 23.01.2021ம் அன்று விசாரித்தார். 23.01.2021ம் தேதி இரவு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1, 2 எப்படி வந்தார்கள் என்பதை நான் பார்க்கவில்லை. சம்பவ இடத்தில் நின்றதை நான் பார்த்தேன். கேமராவை உடைப்பதற்கு முன்னரே பார்த்தேன்.

உடைந்த கேமரா ரோட்டில் கிடந்தது. கேமரா சம்பவ இடத்தில் உடைந்து கிடக்கவில்லை என்றால் சரியல்ல. கேமரா வீடியோ கேமரா ஆகும். கேமரா துண்டு துண்டாக உடைந்து விட்டது. உடனே போலீசார் வந்து விட்டார்கள். சம்பவம் நடந்த உடன் போலீசார் வந்தார்கள். என்னிடம் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்து முகவரி முதலியவை பெற்றுக்கொண்டார்கள். சம்பவ இடத்தில் 100–க்கு மேற்பட்டோர் இருக்கும் போது என்னை விசாரிக்க காரணம் என்ன என்றால் சம்பவ இடத்தில் வைத்து நிறைய நபர்களிடம் விசாரித்தார்கள். அப்போது என்னிடமும் விசாரித்தார்கள். எம்.எல்.ஏ–வை தடுத்து நிறுத்தியதை நான் பார்க்கவில்லை. எம்.எல்.ஏ பிரச்சாரத்தின் போது தான் வீடியோ எடுத்தார்கள். நான் பூக்கடைக்கு செல்லாததால் எம்.எல்.ஏ–வை தடுத்து நிறுத்தியதை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1, 2 வேண்டுகோள் படி அவர்களுக்காக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் எதிரியின் தந்தை பெயரை கூறவில்லை. போலீசார் விசாரணையில் கேமரா பெயர் மற்றும் போண் பெயரும் சொல்லவில்லை. கேமரா மற்றும் போணின் மதிப்பை குறிப்பிட்டு சொல்லவில்லை. சம்பவ நாளன்று 100–க்கு மேற்பட்ட நபர்களுக்கு மத்தியில் பார்த்த எதிரிகளை தற்போது தான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் சரிதான். சம்பவ நாளன்று பார்த்த 100–க்கு மேற்பட்ட நபர்களை எனக்குத் தெரியாது. கூட்டம் நடந்ததால் அந்த இடத்திலிருந்து செல்லமுடியாமல் அங்கு நின்று கொண்டிருந்தோம். அழகியமண்டபத்திலிருந்து – பூக்கடை சந்திப்பு வழியாக திக்கணங்கோடு போனோம். வேறு எந்த பக்கமும் திரும்பி செல்லவில்லை. பூக்கடை

சந்திப்பில் இரண்டு ரோடுகள் போகிறது என்றால் சரிதான். அந்த ரோடுகளில் நான் திரும்ப வில்லை. நான் சொல்வது போல் பூக்கடை சந்திப்பில் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. பூக்கடை சந்திப்பிலிருந்து புதுரோட்டில் செல்லவில்லை.

Name :அனிஷ்

S/o, D/o, W/o : வல்சலம்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**06.08.2025**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் வெள்ளிவிளாகத்தில் வசித்து வருகிறேன். நான் போட்டோ கிராபராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 21.03.2021ம் தேதி மாலை பூக்கடைக்கு வந்தோம். அப்போது போலீசார் உடைந்த கேமரா, போணை படம் வரைந்து கொண்டிருந்தார்கள். கேமரா, போணையும் எடுத்தார்கள். சம்பவ இடத்தை வரைந்தார்கள். அப்போது பார்வை மகஜரில் நானும், எனது நண்பர் ஆல்பா என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள தரப்பு குறுக்கு விசாரணை</u>

சாயங்காலம் இருட்டும் வேளையில் கையொப்பம் செய்தோம். 06.00 மணி இருக்கும். 21.03.2021ம் தேதி கையொப்பம் செய்தோம்.



சம்பவம் எங்கு வைத்து நடந்தது என்று தெரியும். சம்பவத்தை நான் பார்க்கவில்லை. நான் சம்பவத்தை கண்ணால் பார்க்காததால் சம்பவம்

எங்கு வைத்து நடந்தது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது . சம்பவ இடத்தை போலீசார் சொல்லி தந்தார்கள் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு அழைத்து சென்று கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்த பேப்பரில் எழுதப்பட்டதா என்றால்எ னக்கு ஞாபகமில்லை. எழுதபடாத பேப்பரில் கையொப்பம் செய்ததால் எனக்கு ஞாபகம்இல்லை என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கும், பூக்கடைக்கும் 15 கி.மீ தூரம் இருக்கும். அ.சா.1, 2ஐ தெரியாது. எனது நண்பர் ஆல்பாவும், காவல்நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தார். நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.